உ
சிவமயம்

Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A'
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண ஸு வைகாசி மீ கஉவ (1944 மே மீ 25 வியாழக்கிழமை) [இல கச

## இலங்கைக்கு அமெரிக்க ஜவுளிகள்

### வழக்கமான வியாபாரிகள் மூலமாகவே வரும்

### முதல்வரும் சரக்கு மட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு ஜவுளிகள் வரவிருக்கின்றன. முதலில் வரும் ஜவுளிகள் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டபின்னர், மேற்கொண்டு அங்கிருந்து ஜவுளிகள் வழக்கமான வியாபாரிகள் மூலமாகவே இலங்கைக்கு அனுப்பப்படுமென்று இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் நியமிக்கப்படவிருக்கும் ஜவுளிப் பிரதிநிதியின் சம்பளத்துக்கான மானியம் அரசாங்க சபையில் ஒதுக்கப்பட்டபோது 'அமெரிக்க அரசாங்கத்தார் சாமான்கள் கொடுக்கும் முறையை மாற்றியிருப்பதால் சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன' வென்று தாம் அறிவதாகத் தொழில் வர்த்தக மந்திரி அமெரிக்காவிலிருந்து ஜவுளிகள் இறக்குமதி செய்யும் விஷயமாகப் பேசும்போது கூறினார்.

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் 'சப்ளை' மிஷன் மூலமாக ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கு ஜவுளிகள் 'சப்ளை' செய்ய முன்வந்தபோது ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வரும் ஜவுளிகளை இறக்குமதி செய்வதையும் விநியோகிப்பதையும் பொதுக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜவுளி வர்த்தகர்களிடம் விட்டுவிடுவது நல்லதென்று அப்பொழுதிருந்த ஜவுளிக்கட்டுப்பாட்டதிகாரி ஆலோசனை கூறினர்.

தொழில் வர்த்தக நிர்வாகசபை இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள மறுத்து இந்த ஜவுளிகளை மொத்தமாக வாங்கிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தது.

இப்பொழுது அமெரிக்கா முதன் முதலாக இலங்கைக்குக் கொடுக்கவிருக்கும் 3,531 000 யார் துணி மட்டுமே பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் 'சப்ளை' மிஷன் மூலம் இலங்கைக்கு அனுப்பப்படுமென்று தெரிகிறது.

இனிமேல், ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இலங்கையில் இறக்குமதியாகும் ஜவுளிகளெல்லாம் இலங்கையிலுள்ள கம்பெனிகளால் அவற்றின் ஏஜெண்டுகள் மூலம் வாங்கப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்படும்.

## வாலிபனின் பரிதாப மரணம்

கண்டி மே 21

கண்டிப் பொலிஸ் நிலையத்துக்குச் சமீபமாகத் தெரு ஓரத்தில் நின்ற கண்டிவாசியாகிய தர்மசேனா என்ற 17 வயதுள்ள ஒரு வாலிபன ஓடிக்கொண்டிருந்த ஒரு பஸ்ஸினால் அகஸ்மாத்தாகத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

வாலிபனுடைய தலை நொறுங்கிப் போய்விட்டது.

## மிஸ்றர். ஆனே கொழும்புதிரும்பினர்

### இந்திய துறைமுகப் பரிசோதனைபற்றித் திரு. விசுவநாதன்

இந்திய அரசாங்கப் பிரதிநிதி மிஸ்றர் எம். எஸ். ஆனே திங்கட்கிழமை காலை இந்தியாவிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்தார். மிஸ்றர். ஆனேயுடன் அவருடைய காரியதரிசி மிஸ்றர். வி. விஸ்வநாதனும் வந்திருக்கிறார்.

இந்தியாவில் ஒரு மாதத்திற்கு மேல் தங்கிவிட்டு வந்திருக்கும் மிஸ்றர். ஆனேயை நிருபரொருவர் பேட்டிகண்டபொழுது அவர் தனது இந்திய விஜயம் புதுடில்லி அதிகாரிகளைக் கலந்துகொள்வதற்காகத்தான் என்று தெரிவித்தார்.

சமீபத்தில் புதுடில்லி சென்ற இலங்கை இந்திய வியாபாரிகள் தூதுக்கோஷ்டியின் முறையீடுகள் சம்பந்தமாக மிஸ்றர். ஆனே கேட்கப்பட்டபொழுது, குறித்த தூதுக்கோஷ்டி தனியாக இந்திய நிர்வாக சபை டாக்டர், கரேவைக் கண்டு அதன் முறையீடுகளை வெளியிட்டதென்றும் அச்சமயம் தான் சமுகமாயிருக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

மிஸ்றர். ஆனே இந்திய வைஸ்ராய் வேவல் பிரபுவைப் பேட்டி கண்டார்.

டாக்டர் கரேயையும் வேவல் பிரபுவையும் பேட்டிகண்ட இலங்கை இந்திய வியாபாரிகளின் தூதுக்கோஷ்டியில் திருவாளர்கள். எச். எம். தேசாய், ஏ. தாவுத்பாய், ஏ. மாமூஜி ராஜகோபாலன், எஸ். பெரிசுந்தரம் ஆகியோர் இருந்தனர். இந்திய அரசாங்கம் அவர்களுடைய முறையீடுகளைக் கவனிப்பதாக வாக்களித்திருக்கிறது. இலங்கை இந்திய ஜவுளி வியாபாரிகள் தூதுக்கோஷ்டியொன்றும் டாக்டர் கரேயையும் வைஸ்ராயையும் பேட்டி கண்டது.

### தனுஷ்கோடியில் துறைமுகப் பரிசோதனை

தனுஷ்கோடியில் துறைமுக அதிகாரிகள் நடந்துகொள்ளும் விதம் பற்றிப் புகார் இருந்துவருகிறதென்பதை மிஸ்றர். ஆனேயும் அவருடைய காரியதரிசி திரு. வி. விஸ்வநாதனும் ஒப்புக்கொண்டனர்.

சமீபத்தில் சிறிது காலமாகக் கள்ளத்தனமாகச் சாமான்கள் கொண்டு வருவது அதிகரித்து வந்திருப்பதால் சுங்கப் பரிசோதனை கண்டிப்பான முறையில் இருக்க வேண்டியிருக்கிறதென்றும் பிரயாணிகளில் 100க்கு 90 பேர் துறைமுகச் சட்டங்களை மீற முயலுவதாலேயே மீதமுள்ள உண்மையான பிரயாணிகள் கஷ்டத்திற்குளாகவேண்டியிருக்கிறதென்றும் திரு. விஸ்வநாதன் தெரிவித்தார்.

தனுஷ்கோடித் துறைமுகப் பரிசோதனையிலுள்ள கண்டிப்புக் குறையுமென்று எதிர்பார்க்க ஹேது இல்லையென்று திரு. விஸ்வநாதன் கருதுகிறார்.

## காந்திஜி சினிமாபார்க்கிறர்

பம்பாய், மே 21

மகாத்மாகாந்தி, அநேகமாக முதற்றடவையாக, இன்றிரவு பேசும் படமொன்றைப் பார்த்தார். ஜுஹுவில் அவர் வசிக்கும் குடிசையில் "மொஸ்கோவிற்குத் தூதுக் கோஷ்டி" என்ற பேசும்படம் அவர் பார்ப்பதற்காகக் காண்பிக்கப்பட்டது.

அரசியற் பிரச்னைகளை விவாதிக்கும் பொருட்டு திரு. எம். ஆர். ஜெயகரைக் கண்டு பேச மகாத்மா காந்தி விரும்பினரென்று தெரிகிறது. திரு. ஜெயகர் சமீபத்தில் காந்திஜியைக் கண்டு பேசுவாரென்று தெரிகிறது.

காந்திஜியின் தேகநிலை பற்றி டாக்டர் கில்டரும் டாக்டர் சுசீலா நாயரும் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்.

இரவில் காந்திஜீ நன்கு தூங்கினர். அவர் களைப்பாறினவராகவும் சந்தோஷமாகவும் காணப்படுகிறர்.

## புதிய ஈரானிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை

### பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது

டெஹிரான் மே 19

முகம்மது ஸயீத் என்பவரைப் பிரதம மந்திரியாகக்கொண்ட புதிய பெர்ஷிய அரசாங்கத்துக்கு இன்று இரானிய பாராளுமன்றத்தில் ஒரு நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறியது.

பாராளுமன்ற அங்கத்தவர்கள் 92 பேரில 73 பேர் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

## உணவுப் பொருள் உற்பத்தி இயக்கம்

### அரசாங்கப் பகுதிகளின் சிரத்தை

தேசிய உணவு உற்பத்தி இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கனம் விவசாய மந்திரி அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்கப் பல அரசாங்கப் பகுதிகள் அத்துறையில் தீவிரமாகப் பாடுபட்டு வருகின்றன.

இப்பகுதிகள் அவற்றின்கீழுள்ள அதிகாரிகளைப் பிரதானமாகக் கிராமங்களிலுள்ளவர்களைக் காரியாலயங்களிலும் வீடுகளிலுமுள்ள காலியிடங்களில் காய்கறிகள் போன்றவைகளைப் பயிரிட்டுத் தேசிய இயக்கத்தில் பங்கு பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றன. இம்முயற்சி எவ்வளவு தூரம் வெற்றிபெற்றிருக்கின்றதென்பது பற்றி அவ்வதிகாரிகள் இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். இவ் வறிக்கைகள் விவசாய மந்திரியின் பார்வைக்கு அனுப்பப்படும். இம்முயற்சிக்காக ஏற்படும் செலவை யார் ஏற்றுக்கொள்வது என்பது பற்றிச் சில பகுதிகளில 'பிரச்னை' கிளம்பியிருக்கிறது. உற்பத்தி செய்யப்படும் சாமான்களை என்ன செய்வதென்பது பற்றியும் 'பிரச்னை' கிளம்பியிருக்கிறது. அரசாங்கத்தார் எவ்வளவுதூரம் உதவி செய்ய முன்வருவாரென்பதும் ஒரு 'பிரச்னை'யாகும்.

## மட்டக்களப்புத் தேர்தல் எதிரொலி

### வாக்குப்பெட்டிகளின் நிறம் தெளிவாக இருக்கவில்லை

### மனுதாரின் சாட்சியம்

திருகோணமலை மட்டக்களப்புத் தேர்தல் மனு சென்ற திங்கட்கிழமை நீதிபதி மிஸ்றர். கிரெட்ஸர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

சென்ற நவம்பர் மாதம் 20-ந் திகதி நடைபெற்ற திரிகோணமலை மட்டக்களப்புத் தேர்தலில் வெற்றிபெற்ற அபேட்சகரான திரு. வி. நல்லையாவின் தேர்தலை நீக்குமாறு கோரித் தோல்வியடைந்த அபேட்சகருள் ஒருவரான வெளிகாமத்தைச் சேர்ந்த ஜனப். ஏ. என். எம். மிஹ்லார் ஒருமனுவைத் தாக்கல் செய்திருக்கிறர். மனுதார் தம்முடைய மனுவிற் போட்டியிட்ட அபேட்சகர்களுள் ஒருவரான திரு. கனகசிங்கத்துக்கு நீலநிறம் கொடுக்கப்பட்டிருந்ததும் அவருடைய பெட்டிக்குப் பச்சையா திரித்தோன்றக்கூடியதாக வர்ணம் தீட்டப்பட்டிருந்ததாகவும் தமக்கு ஒதுக்கப்பட்ட நிறம் பச்சை என்றும் ஆதலின் அரசாங்கசபைச் சட்ட விதிகளின்படி வாக்குப் பெட்டிகளுக்கு வர்ணம் தீட்டப்பட்டிருக்கவில்லையென்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

தேர்தல் அதிகாரியாக இருந்த கிழ்மாகாணத் தலைவர் திரு. வி. குமாரசுவாமி இரண்டாவது எதிர் மனுதாராக மனுவிற் குறிப்பிடப்பட்டிருக்கிறர்.

திரு. ஜே. ஈ. எம். ஒபயசேகரா திரு. டொட்வெல குணவர்த்தனு திரு. எஸ். ஆர். அமரசேகரா ஆகியோர் மனுதாரராகவும். திரு. வி. எஸ். பார்குமார குலசிங்க திரு. டி. டீ. எல். அலபொன்சோ திரு. ஜே. ஜி. பி. வீரரட்ன திரு. எஸ். சிவசுப்பிரமணியம ஆகியோர் முதலாவது எதிர்மனுதாருக்காகவும் அரசாங்கப்பக்க வழக்கறிஞர் திரு. ஆர். ஆர். குரொசெட் தம்பையா மிஸ்றர் ஜோனவிலசன் ஆகியோர் இரண்டாவது எதிர்மனுதாருக்காகவும் ஆஜராகியிருந்தனர்.

### வாக்காளர்கள் தவறியிருக்கலாம்

மனுதாருக்காக மிஸ்றர் ஒபயசேகரா வழக்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அந்தத் தொகுதியிலுள்ள 48000 வாக்காளர்களில 26000 பேர் தமிழர்களென்றும் 18000 பேர் முஸ்லிம்களென்றும் அந்தத் தேர்தலிற் போட்டியிட்ட அபேட்சகருள் மனுதாரைத் தவிர, ஏனைய ஆறுபேரும் தமிழர்களென்றும் திரு. கனகசிங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட நிறம் நீலமாக இருந்தும் அவருடைய பெட்டியிற் பச்சைபோலத் தோன்றக்கூடிய வர்ணம் பூசப்பட்டிருந்தால் வாக்காளர்கள் தவறியிருக்க இடமிருக்கிறதென்றும் கூறினர்.

தொடர்ந்தவர் பேசுகையில் முதலாவது எதிர்மனுதாருக்கு 4190

தொடர்ச்சி 6-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண௵ வைகாசி௴ ௧௨௨ வியாழக்கிழமை

## தநுஷ்கோடியில் நடக்கும் அக்கிரமம்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மீண்டுவரும் பிரயாணிகள் தநுஷ்கோடியில் உள்ளதாகிய துறைமுகத்தில் சுங்கப் பகுதி அதிகாரிகளிடம் அகப்பட்டுப் படும் இம்சை சொல்லுந்தரத்ததல்லவாம்; அங்கிருந்து இங்கு வரும் பிரயாணிகளை அந்த வழியாகிய தநுஷ்கோடியிலுள்ள துறைமுக அதிகாரிகள் கண்டபடி பரிசோதிக்கத் தலைப்படுகிறார்கள்; உடுத்த துணியல்லாமல் மாறிக்கட்டத் துணி வைத்திருந்தாலும் உபயோகித்த துணிகள் குடை முதலிய பொருள்களாயிருந்தாலும், அந்த அதிகாரிகள் வழிபறித்த திருடர்போல நின்று தடுத்து "இங்கே வைத்துவிட்டுப் போ இல்லையேல் கிருப்பிக் கொடுத்துக் கிடைக்கும் பணத்தை வாங்கிக்கொண்டுபோ" என்று அதட்டி உறுக்கி வெருட்டித் தாம் நினைத்தபடி செய்விக்கிறார்களாம். உடை வைத்துக்கொண்டு போகும் தோற்பெட்டிகளைத் தங்கள் கையிலே தந்துவிட்டுப் போகும்படி கட்டளையிடுகிறார்களாம். சில பிரயாணிகள் அந்த இரக்கமற்ற அதிகாரிகள் செய்யும் அக்கிரமம் காரணமாக எழுந்த ஆத்திரத்தினாலும் வெறுப்பினாலும் தாம் கொண்டுவந்த பொருளை அந்த அதிகாரிகள் முன்னிலையிலேயே கடலில் வீசிவிட்டு மரியாதையை மாத்திரம் பாதுகாத்துக்கொண்டு வருகிறார்களாம். சுருங்கச் சொல்லுமிடத்து இந்தியாவிலிருந்து இங்கு மீண்டுவரும் பிரயாணிகளை அந்தத் தநுஷ்கோடியிலுள்ள அதிகாரிகள் ஆடு மாடு முதலிய மிருகங்களைப்போல, சிறிதும் பொருட்படுத்தாமல்; அப் பிரயாணிகளும் பிரஜைகளாகிய அரச சம்பந்தத்தின் வசமான பிரவேசங்களைப்பற்றி எள்ளளவும் சிந்தியாமல் இம்சிக்கிறார்களெனச் சொல்லலாம்.

யுத்தகாலமெனிலோ பிரஜைகளாயுள்ளார்க்குப் பல வகையான சங்கடங்களை விளைப்பதாகும்; இப்படியான காலத்திலே சங்கடத்தின்மேற் சங்கடமாக அந்தத் துறைமுக அதிகாரிகளும் விளைக்கத் தொடங்கிவிட்டால், இப்பிரயாணிகளின் கதி என்னவாகும்; அதனைக் காட்டிலும் இந்தியாவிற்கு இலங்கை மக்கள் வரவொண்ணாதென இந்திய அதிகாரிகள் ஒரு பிரமாணத்தை விதித்துவிட்டால் நன்றாகும். இந்த இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று மீண்டு வரும் சில சோரவியாபாரிகள் சோரவியாபாரம் செய்கிறார்களென்பது நிசந்தான்; அதற்காக இன்னாரினியாரென்ற பேதம் பாராமல் அங்கிருந்து இங்கு வருவாரெவருக்கும் ஒரேவிதமான தண்டனை செய்வதா?

எதற்கும் ஒரு எல்லையிருத்தல் வேண்டும்; இந்த அக்கிரமத்தைப் புதிய தெல்லியிலேயுள்ள இந்திய அரசினர் சிந்தித்து விசாரணை செய்து தடுக்க முயற்சி செய்யாதொழிவரேல் இரண்டு நாடுகளுக்குமிடையேயுள்ள பிளவு இன்னும் விரிந்துவிடும்; மேலும் இப்படியான பெரும்பிளவை இந்த இரு நாடுகளுக்குமிடையே ஆக்கியவர்கள் இலங்கை அரசாங்க சபையிலுள்ள சிங்களப் பிரதிநிதிகளென்பது ஊரறிந்த இரகசியம். எவன் அபாயஞ் செய்தானோ அவனே உபாயமுஞ் சொல்லவேண்டுமென்றபடி அந்தப் பிரதிநிதிகளே இப்பொழுது நேர்ந்துள்ள இந்த அசௌகரியத்தை நீக்குதற்கு உபாயமுஞ் சொல்லவேண்டும். இனி, இலங்கை மக்களுள் இந்தியாவிற்குப் பிரயாணஞ் செய்து மீண்டு வருபவர்களுள் யாழ்ப்பாணத்தவர்களே கூடிய தொகையினரெனலாம். இந்த யாழ்ப்பாணப் பிரதிநிதிகளுளொருவராகிய திரு. S. நடேசனவர்களின் சொல்லு இந்தியாவிலும் ஒரு அளவிற்குச் செல்லுமென்று கூறுகிறார்கள்; அங்ஙனமாகில் அந்தப் பெரியார் இந்தக் கருமத்திலே தலையிட்டு இப்பிரயாணிகட்கு நேர்ந்துள்ள பரம சங்கடத்தை நீக்கி விடுவாரா?

---

## இலங்கைச் சுகாதார ஏற்பாடுகள்

### பார்வையிடச் 'சைப்ரஸ்' டாக்டர் இருவர் வருவர்

இலங்கையிலுள்ள சுகாதாரப் பகுதி நடவடிக்கைகளைப் பார்வையிடும் பொருட்டுச் 'சைப்ரஸ்' அரசாங்கம் இரு டாக்டர்களை அனுப்பியிருக்கின்றனர். அவ்விருவரும் சமீபத்தில் இங்கு வந்து சேர்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

களுத்துறையிலும் குருணாகலையிலுமுள்ள சுகாதாரப் பயிற்சி நிலையங்களையும் மற்றும் பல இடங்களையும் இவ்விரு டாக்டர்களும் பார்வையிடுவர்.

இலங்கையிற் சுகாதார ஏற்பாடுகளைப் பார்வையிட்டுவிட்டு அவ்விரு டாக்டர்களும் சைப்ரஸ் அரசாங்கத்துக்கு அங்கு எடுத்துக்கொள்ள வேண்டிய சுகாதார ஏற்பாடுகள் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

---

## மகோற்சவம்

வண்வடமேற்கு ஐயனார் கோவிலடிப் பிள்ளையார் கோவிலென வழங்கும் விக்நேசப் பிள்ளையார் கோவிலில் வருகிற ஞாயிற்றுக்கிழமை (28-5-44) துவஜாரோகணமாகி மகோற்சவம் கிரமமாக நடைபெறும். வைகாசிமாசம் 23ந் திகதி (5-6-44) திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்த நாளாகிய பூரணைத் தினத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறுமென அறியலானோம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

### "அவரவர் அதிர்ஷ்டம் பாவம்"

அருணாசலம்பிள்ளை பொன்னம்பல உபாத்தியாயர் வீட்டிற்குச் சென்றபோது உபாத்தியாயர் அவரை வரவேற்று உபசரித்து இன்சொற்கூறி இருக்கச் செய்து, "தம்பீ, இந்தப்பக்கம் வந்து வெகு நாள்; வந்த நோக்கமென்ன? என்னால் ஆகவேண்டியது ஏதுமுண்டானாற் சொல்லுக" என்று இதமாகக் கேட்டார்; "ஐயா, உங்களாலேயே ஆகவேண்டிய ஒரு காரியத்தை உத்தேசித்துத்தான் இப்பொழுது இங்கே வந்தேன்; வேறொன்றுமல்ல, ஐயா, என் மகளுக்கும் எனது சொந்த மருமகனுக்கும் சிறுபிராயந்தொட்டுக் கல்யாணம் நிச்சயித்திருந்தோம்; மருமகனும் கிரமமாகப் படித்து நல்ல ஒழுக்கமுடையவனாய்த் திறமையுடையவனாய் வந்தான்; அது உங்களுக்குத் தெரியும்; ஆனால் இப்பொழுது சிலகாலமாக அவன் கூடாத கூட்டங்கூடிக் கள்ளுக்குடித்தல் முதலிய பழகாத பழக்கம் பழகிப் பழுதாகப் பார்க்கிறான்; இதனைக் கேள்விப்பட்டு நான் உங்களைப் போன்ற பெரியாரிடத்திற் சொல்லி அவனைத் திருத்தி நடக்கச் செய்யலாமென்று எண்ணிக்கொண்டிருப்பதற்கிடையில் அவனுடைய நடத்தையைப்பற்றிய செய்தி என் மகளுடைய காதிலும் பட்டுவிட்டது; அவள் அதனால் மனவருத்தங்கொண்டு தனக்கு விவாகமே வேண்டாமென்று பிடிவாதமாக நிற்கிறாள்; என் மருமகனைத் திருத்திவிட்டால் மகளையுஞ் சம்மதிக்கச் செய்யலாம்; மருமகன் உங்களுடைய சொல்லைக் கேட்டு நடப்பானென்று எங்களுக்கு நம்பிக்கையுண்டு; ஆனதால் நீங்கள் ஒரு நாளைக்கு ஆறுதலான நேரத்தில் அவனை இங்கே கூப்பிடுவித்து அவனுக்குப் புத்தி சொல்ல வேண்டும்; என்பிள்ளை வேறு உங்கள் பிள்ளை வேறல்ல; இதனைப்பற்றிச் சொல்லும்படிதான் இப்பொழுது இங்கே வந்தேன்" என்று விபரமாகச் சொன்னார் அருணாசலம்பிள்ளை. கேட்ட உபாத்தியாயர் சற்றுநேரம் யோசித்தார்; "தம்பீ, அந்தப் பிள்ளை இப்படிப் பழுதுபடுவானென்று அந்தநாளில் நான் கனவிலுங் கருதியிருக்கவில்லை; அவன் செயல் குடியாற் பிறந்து செடியாற் புகுந்ததாயிருக்கிறது; மேலும் பெண்ணாசை கொண்டவர், பொருளாசை பிடித்தவர், மதுபானஞ் செய்யத் தலைப்பட்டவராகிய இவர்களைத் திருத்தி நடக்கச் செய்தல் இலகுவான காரியமல்ல; இரும்புக் கோலைச் சிவக்கக் காய்ச்சிச் சுட்டாலும் இவர்கள் அடங்கார்களென்று முதியோர் சொல்லுவர்; ஆனாலும் நீர் விரும்பிய பிரகாரம் நான் அந்தப் பிள்ளையைக் கூப்பிடுவித்து என்னால் இயன்ற அளவிற்கு ஆகவேண்டிய புத்திசொல்லித் திருத்தப் பார்க்கிறேன்; அப்பால் அவரவர் அதிர்ஷ்டம் பாவம்" என்று கூறிப் பொன்னம்பல உபாத்தியாயர் அருணாசலம்பிள்ளைக்குத் தேறுதல் சொல்லி அவரை விடை கொடுத்தனுப்பினார்.

### "எழுத்தறிவித்தவன் இறைவனாவன்"

பொன்னம்பல உபாத்தியாயர் அடுத்தநாட் காலை, தம்மிடத்திற் படிக்கும் ஒரு பிள்ளையைக் கூப்பிட்டு, "நீ விசுவநாதன் வீட்டிற்குப் போய் அவன் அங்கே நின்றால் நான் வரச் சொன்னதாகச் சொல்லு" என்று அனுப்ப அந்தச் சிறுவன் அப்படியே அங்கேபோய் விஷயத்தைச் சொல்லி விசுவநாதனை உடனே கூட்டிக்கொண்டுவந்து உபாத்தியாயரிடஞ் சேர்த்தான்; வந்த விசுவநாதன் உபாத்தியாயருக்கு நமஸ்காரஞ் செய்து அவர் இருக்கென விநயத்தோடு ஒருபக்கத்தில் ஒதுங்கியிருந்தான்; அவனையழைத்துவரச் சென்ற சிறுவனைப் போகும்படி அனுமதி செய்துவிட்டுப் பொன்னம்பல உபாத்தியாயர் விசுவநாதனைப் பார்த்து "தம்பீ, உம்மை நான் வெகுநாளாகக் காணவில்லை; எப்படி உமது சுகம்; இப்பொழுதும் படித்து வருகிறீரா? என்ன முயற்சி பார்க்க உத்தேசித்திருக்கிறீர்; இப்பொழுது உமக்கு வயசாய் விட்டதே; எங்கேனும் விவாகப் பேச்சு உண்டா? ஆம், ஆம், நீர்தான் புறத்தியிலே போய்ப் புகவேண்டியதில்லையே; உம்முடைய சொந்த மாமனாருடைய பெண் இருக்கிறாளே, அதனை நான் மறந்துபோய் இப்படிக் கேட்டுவிட்டேன்; உம்மிடத்திலும் போதிய பொருள் பண்டமுண்டு; நன்கு படித்திருக்கிறீர்; அவர்களிடத்திலும் போதிய செல்வஞ்செல்வாக்குமுண்டு; அந்தப் பெண்ணும் நன்கு படித்திருக்கிறாள்; பண்டிதைப் பட்டமும் பெற்றுவிட்டாளென்று கேள்வி; அவள் நல்ல குணமானபெண் என்பதை நான் அறிவேன்; அல்லாமலும் உமக்குப் பெயர் விசுவநாதன்; அந்தப் பெண்ணுக்குப் பெயர் விசாலாட்சி; இருவர் பெயரும் பொருத்தமாயிருக்கின்றன; இப்படியே இனிமேலும் எல்லாம் பொருத்தமாக இருக்கட்டும்" என்று பாராட்டிச் சொன்னார். "ஐயா, நான் கடவுள் கிருபையாற் சுகமேயிருக்கிறேன்; இப்பொழுதும் படித்து வருகிறேன்; உங்களைப் போலவே எனக்கும் ஒரு உபாத்தியாயராக இருக்கத்தான் பிரியம்; அதற்காகிய முயற்சிகளையே செய்து வருகிறேன்; என்மாமன் மகளையே எனக்குக் கல்யாணஞ் செய்து வைக்க நிச்சயித்திருக்கிறார்கள்; அவள் பண்டித பரீட்சையிற் சித்தியடைந்திருக்கிறாளென்பது மெய்தான்; என் தகப்பனார் மோசம் போனபிறகு எனக்கும் என் தங்கைக்குந் தாயாருக்கும் மாமாவே மேற்பார்வைக்காரனாகவிருக்கிறார்; எங்களிருவரையும் அவர் தம்முடைய பிள்ளைகள் போலவே மதித்து நடத்தி வருகிறார். எங்கள் மாமியாரும் அப்படியே" என்று சொல்லி முடித்தான் விசுவநாதன். "தம்பீ, நீ சொல்லச் சொல்ல எனக்கு ஆநந்தமுண்டாகின்றது; என்னிடத்திலே படித்த பிள்ளைகள் நல்லாயிருக்கிறார்களென்று கேள்விப்பட்டால் எனக்கு அது பெருஞ் சந்தோஷமாகும்" என்று சொல்லிவிட்டுச் சில நிமிஷநேரம் யாதும் பேசாமல் யோசித்தபடியிருந்தார் உபாத்தியாயர்; பின்னரும் அவர் அவனைப் பார்த்து "தம்பீ, உம்மிடம் நான் ஏதும் கேட்டறியலாகுமோ, அதனாற் குறையில்லையே" என்னலும் "ஐயா, நீங்கள் எதனையும் என்னிடங் கேட்டறியலாம்; நீங்களல்லாமல் வேறுயார் கேட்பது, எழுத்தறிவித்தவன் இறைவனல்லவா; நீங்கள் எதனைக் கேட்டாலும் நான் உள்ளபடி உங்களுக்குப் பதில் சொல்லுகிறேன்" என்று விநயத்தோடு சொன்னான் விசுவநாதன். "வேறொன்றுமல்ல தம்பீ, உம்மைப்பற்றி எல்லாம் நன்மையாகச் சொல்லுகிறார்கள்; ஒரேயொரு குறைமாத்திரம் சொல்லக் கேட்டு

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# கோகழி

[பத்திராசிரியர்]

கோகழி என்ற தலம் எங்குளது? மாணிக்கவாசகசுவாமிகள் இத்தலத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். திருவாசகத்திற் பல இடங்களில் இத்தலத்தின் குறிப்பு வருகின்றது. சிவபுராணம் மூன்றும் அடியில் "கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க" என்றும் போற்றித் திருஅகவல் 157-வது அடியில் "கோகழி மேவிய கோவே போற்றி" என்றும் குயிற்பத்தில் 6-வது பாட்டில் "கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்" என்றும் பண்டாய நான்மறை முதற்பாட்டில் "கோகழிஎங் கோமாற்கு" என்றும், ஷை ஐந்தாம் பாட்டில் "தண்ணிப் பெருந்துறையை நமயிடர்கள் போயகல, எண்ணிஎழு கோகழிக் கரசை" என்றும் இத்தலக்குறிப்பு வருதல் காண்க. பல புலவர்கள் கோ+கழி என்று பிரித்து ஆவடுதுறையென்றும் பெருந்துறையென்றும் பொருள் கொண்டனர். கோ=ஆ, பெரிய; கழி=துறை என்பது அவர்கள் கருத்து. கோகழி என்ற பெயரோடு இன்றும் ஓர் ஊர் கூறப்படுமாயின், இவ்வாறு பிரித்து ஆவடுதுறைக்கும் பெருந்துறைக்கும் வலிந்து பொருத்தவேண்டியதில்லை. திருவாசகத்துள் யாண்டும் ஆவடுதுறை கூறப்படவில்லை. வெளிப்படையாக அவ்வாறு கூறப்படாத ஒரு தலத்தை இவ்வாறு வலிந்து கோடல் எற்றுக்கு? மேற்கூறிய பண்டாய நான்மறை ஐந்தாம் பாட்டில் "தண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல, எண்ணிஎழு கோகழிக் கரசை" என்ற பகுதியை நோக்கினால், பெருந்துறையும் கோகழியும் அடுத்தடுத்து முதலடி இரண்டாவதடிகளில் வருதலால், இரண்டும் ஒரே தலம் என்று கூறுவதற்கு மிகுந்த துணிவு வேண்டும். மேலும் பெருந்துறையென்ற பெயர் திருவாசகத்துள் சுமார் நூற்றுக்கு மேலான இடங்களில் வருவதால், மேற்கூறிய ஐந்தடிகளில் மட்டும் இவ்வாறு மாற்றிக் கூறப்படவேண்டிய அவசியமென்ன? சிவபுராணத்துள் 3-ம் அடியில் பெருந்துறையென்று வெளிப்படையாகக் கூறாமல் கோகழி என்று மறைத்துக் கூறவேண்டிய நெருக்கடியும் அவசியமும் மாணிக்கவாசகருக்கு ஏற்பட்டதென்று ஏன் கொள்ளவேண்டும்? இவ்வாறு பல வழிகளிலும் சிந்தித்தால் கோகழியென்ற பெயரோடு இன்றும் வழங்கப்படும் ஓர் ஊரையே மாணிக்கவாசகர் குறிக்கிறார் என்ற முடிபுக்கே நடுநிலையில் நிற்போர் ஒவ்வொருவரும் வருவர். இத்தலம் எங்குளது?

கன்னட தேசத்தில் பல்லாரி ஜில்லாவில் ஹடகள்ளி தாலுகாவில் கோகழி என்ற தலம் உள்ளது. இது ஹொஸ்பேட் (Hospet) ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 32 மைல் தொலைவிலுள்ளது. இவ்வூரிலும் இதைச்சுற்றிலுமுள்ள கல்வெட்டுக்களிலிருந்து இவ்வூரின் பெயர் கோகழியென்பது விளங்குகின்றது. இன்றும் இவ்வூர் இப்பெயரால் அழைக்கப்படுகின்றது. இவ்வூருக்கருகில் சுமார் 20 மைல் தொலைவில் நீலகண்ட நாயனார் திருஅவதாரத் தலமாகிய காம்பிலி உள்ளது. இராவணனால் அசைக்கமுடியாமற்போன மஹாபலேசுவரர் வீற்றிருக்கும் திருக்கோகர்ணமும் கன்னட நாட்டிலுள்ளதே. பல்லாரிக் கோட்டையிலுள்ள திருக்கோயிலில் அறுபத்துமூவர் சரிதம் மதிற்சுவரில் சித்திரமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. கன்னடநாட்டிலுள்ள நஞ்சன் குடியில் அறுபத்துமூவர் சிலைகள் சிவாலயத்தில் மிகப்பெரிய உருவங்களாக உள்ளன. அக்காலத்தில் கன்னடதேசம் தமிழ்வழங்கும் நாடாகவே இருந்தது. Caldwell முதலிய ஆராய்ச்சியாளர்கள் கன்னட மொழிக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமைப்பகுதிகளை விளக்கியுள்ளனர். இற்றைக்கும் கன்னடதேசம் சிறந்த வீர சைவ நாடாகவே திகழ்கின்றது. கோகழியிலும் இன்று வீரசைவ சமயமே விளக்கமுற்றிருக்கின்றது.

கோகழியைப்பற்றிய குறிப்புள்ள சில கல்வெட்டுக்களை இனி ஆராய்வாம். (496/1914) என்ற கல்வெட்டில் கி. பி 1158-ல் மகாமண்டலேசுவர வீரபாண்டியதேவன் கோகழி நாட்டையும் சூழ்ந்துள்ள நாடுகளையும் ஆண்டான் என்ற குறிப்புள்ளது. இவ்வாறே 450/1914, 86/1904 107/1904, 115/1913, 118/1913 முதலிய பல கல்வெட்டுகளிலும் கோகழிநாட்டு மன்னர்கள் பாண்டியர்கள் என்றே கூறப்பட்டுள்ளனர். கி. பி. 1087-லும் கி. பி. 1123-லும் ஏற்பட்ட சாசனங்களில் கோகழி நாட்டிலுள்ள சில கிராமங்கள் திராவிட தேசத்துப் பிராமணர்கட்குத் தானம் செய்யப்பட்ட விவரம் கூறப்படுகின்றது. இது எபிகிராபிகா இண்டிகா என்ற வெளியீட்டின் 12-வது தொகுதியில் 142-155 பக்கங்களில் காணப்படுகின்றது. 441/1914, 443/1914 என்ற கல்வெட்டுக்களில் கோகழியில் மிகப் பிரபலமாகத் திகழ்ந்த மல்லியாள பண்டிதருடைய சீடர் ஞானேசுவர பண்டிதருடைய சீடர் சோமேசுவர பண்டிதருக்கு நிலம் தானமாகத் தரப்பட்ட விவரம் காணப்படுகின்றது. மேற்கூறிய மல்லியாள பண்டிதர் லகுலீச குருமரபைச் சார்ந்தவரென்றும் கோகழிநாட்டுப் பெருங்குரவராகத் திகழ்ந்தவரென்றும் கூறப்படுகின்றனர். இன்றைக்கும் பல பழைய மடங்கள் இருந்த குறிப்புக்கள் பல கோகழியிற் காணப்படுகின்றன. மேற்கூறிய கல்வெட்டுக்களிலிருந்து நான்கு விஷயங்கள் தெளிவாகின்றன:-1 கோகழிநாட்டு மன்னர்கள் பாண்டியர்கள் என்று கூறப்பெற்றமை. 2 கோகழி நாட்டில் திராவிட தேசத்துப் பிராமணர்கட்கு நிலதானம் செய்யப்பட்டமை 3 கோகழிநாட்டில் பல மடங்களும் குருமார்களும் விளங்கியமை 4 கோகழிநாட்டில் சைவம் நன்கு பொலிவுற்றிருந்தமை.

மாணிக்கவாசகர் காலம் மூவர் முதலிகட்கு முந்தியதென்றும் பிந்தியதென்றும் இரண்டு கொள்கைகள் உண்டு. பிந்தியதாயின் மேற்கூறிய கல்வெட்டுக்கள் பெருந்துணை செய்யும். முந்தியதாயின் கன்னட நாட்டுக்கும் தென்பாண்டி நாட்டுக்கும் தேவாரகாலத்துக்கு முந்தியே ஏற்பட்ட தொடர்பு நினைவுகூர்தற்குரியது. பெரியபுராணத்துள் மூர்த்தி நாயனார் புராணத்தில் 11, 12-வது பாடல்களைக்கொண்டு "கானக கடி சூழ்வடுகக் கருநாடர் காவல்மானப் படைமன்னன்......தமிழ் நாடுடை மன்னனை வீரம் சிந்தச் செருவென்று......மதுராபுரி காவல் கொண்டான்" என்ற செய்தி புலப்படுகின்றது. கல்வெட்டுச் சான்றுகளும் இதை வலியுறுத்தப்படுகின்றது. (Kalabhara Interregnum) என்று சரித்திர ஆராய்ச்சியாளர் இந்நிகழ்ச்சியைக் குறிக்கின்றனர். பாண்டிநாட்டுக்குள் சமண சமயம் புகுந்ததும் இக்காலத்திலேதான். எனவே தேவார காலத்துக்கு முன்பாகவே பாண்டிநாட்டுக்கும் வடுகக் கருநாடருக்கும் தொடர்பேற்பட்டது ஒப்புக்கொள்ளக்கூடிய செய்தியேயாம். அக்காலத்திருந்த கருநாடர்தேயத்தவர் பாண்டிநாட்டிலும் பாண்டிநாட்டவர் கருநாடர் தேயத்திலும் குடியேறிக் கலப்புற்றிருத்தல் இயல்பு. இவ்வாறு இருநாட்டவரும் கலப்புற்ற பிறகு, திருவாதவூரிலே அவதரித்தவர் மாணிக்கவாசகர். இவர் கன்னட அந்தணர் என்றோ வீர சைவர் என்றோ கொள்ளவேண்டிய அவசியமில்லை. தமிழ் நாட்டு அந்தணர் குடியிலே சைவ சித்தாந்த சமயத்திலே பிறந்தவராகவே கொள்ளலாம். அக்காலத்திய கருநாடர் நாகரிகக் கலப்பில் கோகழி என்ற கருநாடர் தலத்தின் பெருமையும் வரலாறுகளும் வாதவூரடிகளுடைய மனத்தைக் கவர்ந்திருக்கலாம். அரசனிடம் மந்திரியென்ற முறையில் பல சௌகரியங்களோடு அவர் கோகழிசென்று தரிசித்துமிருக்கலாம். தேவார காலத்துக்கு முன்னும்பின்னும் கோகழிநாட்டுக்கும் பாண்டிநாட்டுக்குமிருந்த அந்தணர் முதலிய தொடர்புகள், வாதவூரடிகள் பல்லாரி ஜில்லாவிலுள்ள கோகழியைக் குறித்திருக்கலாம் என்ற ஊகம் வலிபெறுமாறு செய்கின்றன.

இதை அறுதியிட்டு முடிந்த முடிபாக எவரும் கொள்ளுதல் கூடாது. மேற்கூறியவைகளைத் தத்தம் ஆராய்ச்சியில் வைத்து உண்மை நோக்குடன் ஒவ்வொருவரும் தெளிதல் வேண்டும். நன்று வாதவூரடிகள் வழுத்திய கோகழியாண்டுள்ளதென்பதையறியுமாறு கோகழியாண்ட குருமணி அருள்புரிக.

# பண்டைத்தமிழரின் சமயம்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

மெய்யுணர்ச்சிக்குள்ள தடைகள்

சமயத்தின் நோக்கம் உயிர்களுக்கு மெய்யுணர்ச்சியை உண்டாக்குவதில் உதவிபுரிவதென்பதை முன்னமே விளக்கியுள்ளேன். இம்மெய்யறிவே முத்திப்பேறும். உணர்ச்சியின்றி மெய்யறிவு கூடாது. உண்மையை யாம் உணர்ந்து தெளியும்போது அன்புடன் ஐக்கியப்படுகின்றோம். அல்லது அன்பாக மாறுகின்றோம் இதுவே உணர்ச்சியிற் சிறந்த நிலை. உயிர்களின் தன்மை என்னெனின் அவை உண்மையை உணர்ந்தால் அவ்வுண்மையோடு நெருங்கிய சம்பந்தப்பட்டால் அவை உண்மையைப்போல் மாறுகின்றன. இவ்வுண்மையே அன்புமயமாயுள்ள கடவுளின் வடிவமாகலின் உண்மையை உள்ளபடி உணர்ந்த உயிர்கள் அன்புருவங்களைக் கொள்ளுகின்றன. சுருங்கக் கூறுமிடத்து நமது சமயம் எடுத்துக் கூறும் அத்துவித ஆனந்த நிலை அதுவேயாகும். இம்முத்தி நிலையை இதர சமயத்தினர் எப்படி மதிக்கின்றனரோ எனக்குத் தெரியாது. அவர்களெல்லாம் உலக அறிவு கொண்டு முத்தி நிலையை அளக்கத் துணிவதால் உண்மையை உணரமாட்டார். கடவுளைக் கண்ட ஞானிகள் நமக்கு முத்தி நிலையின் தன்மையை உள்ளபடி விளக்கிக் காட்டியிருப்பதால் யாம் அவற்றைக் கைக்கொள்ளுவோமாக. இம்மெய்ந்நிலையை யாம் அடைவதற்குச் சாதகமாக எம்மை அடையவொட்டாது தடுக்கக்கூடிய பல இடைஞ்சல்களையெல்லாம் எடுத்துக்காட்டி அவற்றைப் பரிகரிக்கத்தக்க முறைகளை நமது சமயம் புகலாநிற்கின்றது. இப்படி உயிர்களைப் பாதிக்கக்கூடியவை ஆணவம், மாயை, கன்மம் எனும் மலங்களாம். அம்மும்மலங்களோடு மாயேயம், திரோதாயி என்னும் இரு மலங்களுஞ் சேர்வதுண்டு.

ஆணவம்

இது நமது அறிவை மறைத்து நிற்கும் சத்தி. இது சித்துமன்று; அசித்துமன்று. உருவத்தையும் அளவையையும் கடந்தது. உயிர்களைப் போல் உருவமில்லாதது. உயிர்களோடு உடன் கலந்துநின்று அவற்றின் அறிவை மறைப்பது. சடமாயுள்ளது உயிர்கள் அநாதியே ஆணவமலத்தாற் கட்டுண்டு கிடப்பன. அவை மாயாகாரியமாகிய தனுகரணபுவன போகங்களைப் பெற்றபிறகே அவற்றின் சிற்றறிவு சிறிது பிரகாசமுறுகின்றது. அப்போதுங் கூட ஆணவமல வலி குறையவில்லை. யான் எனது என்னுஞ் செருக்காலும் மயக்க அறிவினாலும் இவற்றை அறியலாம். இவ்வலி திருவருட்பிரகாசத்தின முன் குன்றும்.

மாயை

இது ஆன்மாக்களுடைய அறிவிச்சை தொழில்களை சிறிது விளக்குதற் கேதுவாகிய தனுகரண புவன போகங்களைத் தோற்றுவித்தற்கு முதற்காரணமாயுள்ளது. இம்மாயை இரண்டுவகைப்படும். சுத்தமாயை அசுத்தமாயை என்பனவாம். சுத்தமாயை சொல்வடிவமும் சுத்தமாகிய பொருள்வடிவுந் தோன்றுதற்கு முதற் காரணமாய் மயக்கஞ் செய்யாததாய் இருப்பது. அசுத்தமாயையாவது ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறைவிடமாய் ஆன்மாக்களுக்குச் சுத்தாசுத்தமும் அசுத்தமுமாகிய தனுகரண புவன போகங்கள் தோன்றுதற்கு முதற்காரணமாய் மயக்கஞ் செய்வதாய் இருப்பது.

கன்மம்

நாம் செய்யும் புண்ணிய பாவங்களின் பலனைத் தருவது இதுவாகும். இது இரண்டுவகைப்படும். நல்வினை தீவினை. இவ்வினைகள் எடுத்த பிறப்பிலே செய்யப்பட்டபொழுது ஆகாமியம் எனப்படும்; பிறவிதோறும் இப்படி ஈட்டப்பட்டுப் பக்குவப்படும் வரையும் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும்பொழுது சஞ்சிதம் எனப்படும்; அச் சஞ்சித கன்மங்களுள்ளே பக்குவப்பட்டவை மேல் எடுக்கும் உடம்பையும் அங்கொண்டு அநுபவிக்கப்படும் இன்பதுன்பங்களையும் தந்து பயன்படும்பொழுது பிராரத்தம் எனப்படும்.

தாம் தாம் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி உயிர்கள் நால்வகைத் தோற்றத்தையும் எழுவகைப் பிறப்பையும் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதத்தையும் உடையனவைகளாய்ப் பிறந்திறந்து உழன்று கடைசியாக உண்மைநிலையை அடைந்து உய்யும்.

மாயேயம்

மாயையால் ஆகிய இவ்வுலகமும் நமது உடம்பும் அதன் பஞ்சேந்திரியங்களும் மாயேயம் எனப்படும். அநாதிபந்தமாகிய ஆணவமலத்தைப் போக்குவதற்கு இம்மாயா மலம் நமக்குக் கொடுக்கப்படுகின்றது. விஷத்தைப் போக்குவதற்கு வைத்தியன் விஷத்தைக் கொடுப்பது அனைவரும் அறிந்த விஷயம்.

திரோதாயி

ஆணவம் கன்மம் மாயை என்னும் மும் மலங்களையுந் தொழிற்படுத்திப் பாசம் வருவிக்குஞ் சிவசத்தி இதுவாகும், இது மலத்தைச் செலுத்துதலினாலே மலம் என உபசரிக்கப்பட்டது.

—தொடரும்

—சித்தாந்தம்

# தருமர் உள்ளம்

(சோம. சரவணபவன்)

இங்கே தருமர் என்றது நம்மவரனைவரும் நன்கறிந்த பாண்டவர் ஐவருள் முதல்வராகிய தருமரையேயாம். பொறுத்தார் அரசாள்வார் பொங்கினர் காடாள்வார் என்று எங்களுக்குப் புத்திபுகட்டுகிற முதியோர் பொறைக்குத் தருமர் என்று இவரைத்தான் சுட்டிக் காட்டிக் கொள்ளுகின்றனர். இப்படி உயர்ந்தோரால் உத்தமர்என்று போற்றப்படும் பெரியோரை நாங்கள் எங்கள் இலட்சிய புருஷராகக் கொள்ளுதல் எங்கள் உய்வுக்கு ஏதுவானதோர் சிறந்தவழியாகும். பெரியோரது உள்ளத்தை ஆராய்ந்தறிதல் எங்களுக்கு எக்காலத்தும் நன்மையே பயக்கும். ஆதலினுலே இவரது உள்ளத்தைச் சற்றே ஆராய்ந்து பார்ப்போம்.

ஒருவருடையஉள்ளத்தை காக்களறிதற்குக் கருவியாயிருப்பவை அவருடைய வார்த்தையும் செயலுமே. இந்தத் தருமருடைய வார்த்தையும் செயலுமோ பாரதம் முழுவதிலும் பரந்துள்ளன. பொட்டிட்டதுபோல இவரது உள்ளத்தைத் துலக்கமாக எடுத்துக் காட்டுகிற வார்த்தை செயல்களுள் இரண்டொன்றை மாத்திரம் இந்தக் கட்டுரையிலே ஆராய்வோம்....

பாண்டவர் வனவாசஞ் செய்த காலத்திலே ஒருநாள் திரௌபதியினுடைய வேண்டுகோளுக்கிசைந்து அருச்சுனன் அமிதரிஷி முனிவருண்ணுதற்குரிய நெல்லிப்பழத்தை முன்பின் யோசிக்காமல் அம்பெய்து வீழ்த்திப் போட்டான். பின்புதான் தவறு இன்னதென்று எல்லோரும் உணர்ந்தனர். முனிவருடைய சாபத்திற்கு ஆளாகாமற் பிழைத்தற்கு நெல்லிக்கனி மரத்திற் பொருந்த வேண்டும். அது பொருந்துதற்கோ பாண்டவரைவரும் பத்தினி திரௌபதையும் தங்கள் உள்ளக் கிடக்கையை வெளியிடவேண்டும் எனகிறார் ஸ்ரீ கிருஷ்ண பகவான். அந்த நிலையிலே இந்தத் தருமர் தமது உள்ளக்கிடக்கை இன்னதென்பதை

"வெல்லுக வறமு மெய்ம்மையும் பொறையு
மேகமே னியனும்வெல் லாமற
செல்லுக பாவம் பொய்மொழி கோபந்
தயித்தியர் குலமென தெளிவுற்
றலுமுவம பகலுமென் மன நிகழ்வு"

என்று வெளியிடுகின்றார்.

இராப்பகலாக இவருடைய மனத்திலே தாண்டவமாடுகிற எண்ணம் இதுவாம். அறமும், சத்தியமும், பொறையும், திருவருளுமே ஓங்கி நிலைபெறவேண்டுமாம். இவற்றின் மறுதலையானவையெல்லாம் அழிந்து போகவேண்டுமாம். இவையெல்லாம் நல்லவைதான். இவைகளைப் பற்றி நூல்களெல்லாம் மிகவும் விரிவாக விளக்கிக் கூறுகின்றன. ஆனால் இவைகளைப்பற்றி இவர் கொண்டுள்ள கருத்து யாது என்பதை இவரே சொன்னால் நன்றாயிருக்குமல்லவா? ஆதலால் இவர் யாது சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

ஜயத்திரதன், வனத்திலே திரௌபதி தனித்திருந்த சமயம் பார்த்துவந்து அவளை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடனே தூக்கிக்கொண்டோட முயன்றபொழுது, பாண்டவர்கள் தெய்வாதீனமாக வந்து சேர்ந்துவிட்டார்கள். தன்னிடம் சிக்கிக்கொண்ட ஜயத்திரதனை வீமன் கொல்ல எண்ணுகிறான். தருமரோ அதற்குடன்படாமல் மறுக்கிறார். திரௌபதியோ பழிவாங்கவேண்டுமென்று ஏவித் தருமர்மீது குற்றஞ் சுமத்துகிறாள். இவருடைய இரக்கம் பொறை முதலான குணங்களே தாங்கள் அடைந்துள்ள கீழ் நிலைக்குக் காரணம் என்று சொல்லி வருந்துகிறாள். அப்பொழுது இவர் சொல்லுகிற சமாதானத்தைப்பாருங்கள்; "வசைமொழிக்குவசைமொழியும், தீமைக்குத் தீமையும், கொலைக்குக் கொலையுஞ் செய்கலே முறையாமாயின், உலகம் நடைபெறுவதெங்ஙனம். என்ன தீமைதான் அடையினும் பொறுத் தருளுவதே சிறந்த தருமமாம். தன் கோபத்தை அடக்கியாளுபவனே விவேகியும் உத்தமனுமாவான். நிந்திக்கப்பட்டவழியும், துன்புறுத்தப்பட்டவழியும், குற்றம்புரியத் தூண்டவும் கோபிக்கப்பட்டவழியும் பொறுமையே சிறந்த குணமாம்; பொறையே தானம். பொறையே சத்தியம். பொறையே அறவுக் கங்கமாம். பொறையே துறவறத்துக்கு அரணும். பொறையே தவமாம். பொறையேதெய்வசாந்நித்தியமாம், பொறையேபிரபஞ்சத்தின் ஆதாரமாம். விவேகிகள் எதனையும் பொறுத்தருளுதல் வேண்டும். அங்ஙனஞ் செய்தலால் ஞானத்தையடைகிறார்கள்." இவர் இப்படியெல்லாம் சொல்லியும், திரௌபதி இலகுவிலே சாந்தமடையக் காணோம். அவள் கடவுளையும் தருமத்தையும் நிந்திக்கிறாள். அப்பொழுது இவர் மேலும் தொடர்ந்து பின்வருமாறு சொல்லுகிறார்.

"நான் பலனைவிரும்பி யாதொரு கருமமுஞ் செய்வதில்லை. இரப்பவர்க்கு நானீவது புண்ணியமபுகழ் கருதியன்று. ஈதல் எனது கடன். யாகங்கள் செய்கிறேன். பயன் குறித்தன்று. அது எனக்குரிய தொழில். சத்தியநெறியில் நிற்கிறேன். அதுவும்பயன்குறித்தன்று. அது எனக்குரிய தருமம். வேதத்தில் விதித்ததைச்செய்வது யாவர்க்கும் கடனாம். அதற்கு மாறு செய்தலோ கூடாது. பலனை நோக்கி எவன் தருமநெறி நிற்கிறானோ அவன் தருமவணிகனாவான். பயனைக் கருதிச் செய்யப்படுவதெல்லாம் வாணிகமன்றோ? அது தருமமுறையன்று. அங்ஙனஞ் செய்வோர் தருமசீலரெனப்படார். புண்ணிய பாவங்களெல்லாம் தப்பாமற் பயன் தருவனவேயாம். ஆயினும் பயனை நோக்கிச் செய்தலாகாது. சற்கருமமே எல்லாவற்றையும் முடிவிலே வென்று நிலைகொள்வது. ஆதலாற் கடவுளைத் தூஷித்தலாகாது. அவர் செய்வனவற்றையெல்லாம் பொறுமையோடு பார்த்தனுபவித்தலே நமது கடனாம். கடவுளினது திருவருளினாலேயே பிறவியென்னும் துன்பத்தினீங்கி நித்தியானந்தப் பெருவாழ்வினை அடைகின்றோம். சின்னாள் வாழ்வினையுடைய அற்பசீவர்களாகிய நாம் அநாதி நித்தியப் பூரணமுதல்வரைப் பக்தியினாலடைவதே கடன்"

இந்த மொழிகளினாலே திரௌபதியும் வீமன் முதலானோரும் சாந்தமடைய ஜயத்திரதனும் உயிர் பிழைத்துச் செல்கிறான்.

நச்சுப் பொய்கையிலே காலக்கடவுள் கேட்ட கேள்விகளுக்கும் இவரிறுத்த விடைகள் இவரதுஉள்ளத்தை உள்ளவாறு காட்டுவனவாகும். அங்கே கூறிய பலவற்றுள், மோக்ஷத்துக்குறுதி சத்தியம் எனவும், தெய்வத்தையும், விருந்தினரையும், சுற்றத்தாரையும், பிதிர்களையும், தன்னையும் திருப்தி செய்யாதவன் யாவன்? அவன் சுவாசமுடையவனேயாயினும் உயிரில்லாதவனேயாவன் எனவும் வருகிற விடைகள் இவரது கருத்தை உறுதிப் படுத்துகின்றன.

இவருடைய விடைகளைக் கேட்டு மகிழ்ந்த காலக் கடவுள் இறந்த தம்பியர் நால்வருள் ஒருவன் உயிர்பெறக் கடவன் என்று வரமளிக்க, இவர் நகுலன் உயிர்பெறக் கடவன் என்கிறார். வீமன் அருச்சுனனென்போர் இவருக்கு உயிர் போன்றோர். அவ்வாறிருப்பவும் நகுலனை விரும்பினதற்குக் காரணம், "தருமத்தை நோக்காது தனது கருமத்தை நோக்கலாகாது. என் தாய்க்கு நான் புத்திரனாயிருக்கிறேன். நகுலன் இறப்பினோ அவன் தாய் புத்திரனில்லாதவளாவாள். ஆதலால் அவனே எழும்புதல் வேண்டும்" எனகிறார். என்னே இவரது நீதிநிறைந்த உள்ளம்!

யுத்த களத்திலே பதினைந்தாம் நாட் போரிலே ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவருடைய சத்தியத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கிறார். துரோணாசாரியரை வெல்லுதற்கு அவர் மகன் அசுவத்தாமா இறந்தானென அவருக்கொரு பொய் சொல்லவேண்டியிருக்கிறது. வீமனோ அசுவத்தாமா வென்னும் யானையொன்றைக் கொன்றுவிட்டு, "அந்தோ அசுவத்தாமாவென்னும் மதயானையும் இறந்தது" என்று இரு பொருள்பட முழங்கிக் கூறுகிறான். அது கேட்ட துரோணாசாரியர் சோர்ந்து வருந்திச் சிறிதுநேரங் கழிந்தபின்பு உண்மையை அறியும் பொருட்டு ஒரு தூதனைத் தருமரிடம் அனுப்புகிறார். அசுவத்தாமா இறந்தானென்று பொய் சொல்லும்படி தூண்டுகிறார் ஸ்ரீ கிருஷ்ணர். அவ்வேளையிலே தருமருடைய உள்ளம், "அணிய கலையும் இலமும் அரும்பெரும் மகவும் அன்பும், திண்ணிய சீரும் மிக்க செல்வமும் திறலும் தேசும், எண்ணிய பொருள்கள் யாவும் இயற்றிய தவமும் ஏனைப் புண்ணியம் அனைத்தும் சேரப் பொய்மையாற் போமன்றே" என்றிடித்துரைக்கின்றது. (எனினும், ஸ்ரீகிருஷ்ணருடையசூழ்ச்சியினுலேயாற்றலே தருமர் "அசுவத்தாமா இறந்ததுமெய்ம், யானை" என்பதில "அசுவத்தாமா இறந்தது மெய்" என்பதை உரத்த குரலிலும், "யானை" என்பதைத் தாழ்ந்த குரலிலும் கூறிக் கொள்ளுகின்றார்) இது சொல்லளவில் உண்மையானாலும், பயனளவிலே கொடும்பொய்யென்பர்.)

இவருடைய உள்ளத்தை உலகுக்குக் காட்டுதற்கு ஸ்ரீ கிருஷ்ணர் முன்னொருநாட் செய்த சூழ்ச்சியுமொன்றுண்டு. இவரையும் துரியோதனனையும் தம்மிடம் அழைத்தார். இவரைப் பார்த்து மிகவுங் கெட்டவனொருவனைப் பார்த்துப் பேரைப் பிடித்து வருமாறு சொல்லிவிட்டுத் துரியோதனனைப் பார்த்து நல்லவர்கள் பத்துப் பேரைப் பிடித்துவருமாறு சொன்னார். இருவரும் தங்களுக்கிட்ட கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்டார்கள், தங்கள் இலட்சியப் பொருளைத் தேடி எங்கும் அலைந்து திரிந்தார்கள். எடுத்த கருமம் கைகூடவில்லை. கோடானுகோடி மக்கள் வசிக்கிற இந்த உலகத்திலே துரியோதனனுக்கு நல்லவன் ஒருவனுவது அகப்படவில்லை. பாராமலே நல்லவன் என்று மதிக்கப்படுகிறவன் எவனிடத்திலும் ஏதாவது குற்றம் இருக்கிறதாகவே துரியோதனன் கண்ணுக்குத் தோன்றிற்று. உலகம் முழுவதுமே கெட்டதொன்று ஆயவல் கண்டான். ஆனால் அந்த உலகத்திலே கெட்டவனொருவனையாவது கண்டுகொள்ள முடியவில்லை இந்தத் தருமருக்கு. உலகம் முழுவதும் நல்லதாகவே இவருடைய கண்ணுக்குத் தோன்றிற்று. கள்ளர் காடர் புலையர் பொய்யர் டாதகர் முதலானவர்களும் அஞ்ஞானத்தினுலோ அறிவு மயக்கத்தினுலோ இன்ன இன்ன விதமாக நடந்துகொள்ளுகிறார்கள் என்று அவர்கள்மீது கொண்டுள்ள இரக்கத்தினுலேசகல நமது இவருக்குநல்லவர்களாகவே தோன்றினுர்கள். ஆதலினுலே இவர் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் போய், "பகவானே! உலகத்திலே கெட்டவர்கள் ஒருவருமேயில்லை. கெட்டவர்களைக்காணவேண்டும் என்றெண்ணிப் புறப்பட்ட நானே கெட்டவன்" என்று சொல்லி வருந்தலானுர். இப்படிப்பட்டது இவரது உள்ளம்.

எங்களுக்கும் இந்த உளப்பான்மை வளரும்படி திருவருள் கைகூடுவதாக.

## நிறப்பருத்தி உற்பத்தி

1941-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பரீக்ஷையின் பலனுக, சோவியத் ருஷியாவில் உஸ்பெக்கில் பல நிறப் பருத்திகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நிறங்கள் மழையால் கழுவுண்டேனும் சூரிய வெப்பத்தால் வெளுத்தேனும் போவதில்லை. பச்சை நிறத்திற் பலவகை ரகங்கள் இதுவரை விஞ்ஞான சாஸ்திரிகளால உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் பல நிறங்களைப் பெறுவதற்கு விஞ்ஞானசாஸ்திரிகள் முயல்கின்றுர்கள்.

## புத்தூர்ப்பொதுசன மகாசபை

நிகழும்தாரணஞுசித்திரைமீ 28-ந்உ (10-5-44) புதன்கிழமை சாயந்தரம் 5½ மணியளவில் மேற்படி மகாசபை புத்தூர் மெதடிஸ்ட்மிஷன்பாடசாலை மண்டபத்தில் திருவாளர் அம்பலவாணர் சுப்பிரமணியம் அவர்களினது தலைமையில் நடைபெற்றது. அத்தருணம் திரளான அங்கத்தவர்கள் சமூகமளித்தனர்.

புத்தூர்க் கிராமச்சங்கத் தலைவர் திருவாளர் அ. க. முத்துக்குமாரு அவர்கள் மேற்படி பொதுக்கூட்டத்தின் நோக்கத்தைச் சபையோருக்கு விளங்க உரைத்தனர். மேற்படி விஷயத்தை ஆதரித்துப் பல பேச்சாளர் விரிவுரை நிகழ்த்தினர்.

பின்வரும் பிரேரணைகள் திருவாளர் சி. கனகசபை அவர்கள் பிரேரிக்கத் திருவாளர் சு. சதாசிவம் அவர்கள் அநுவதிக்கச் சபையோர் அவற்றை ஏகமனதாக அங்கீகரித்தனர்.

பிரேரணைகள்:—1 எம் மத்தியிலிருக்கும்உப தபாற்கந்தோர் இப்போது இருக்கும் நிலைமையில் இருக்கவேண்டுமென்றும், அது எக்கிலை காரணமாகவும் பாதிக்கப்படக்கூடாதென்றும், இன்னும் அவ்வுபதபாற்கந்தோருக்குச் சில அங்கங்களைக் கூட்டித்தர உடன்தையாயிருக்கவேண்டுமென்றும் அரசாட்சியாரை இம்மகாசபை கேட்கிறது.

2 எமது கிராமத்தில ஒரு பெரிய ஆஸ்பத்திரி (Hospital) கட்டி அதற்குரிய ஒழுங்குகள் செய்து தரவேண்டுமென்று இம்மகாசபை அரசாட்சியாரை அதி விநயத்துடன் கேட்கின்றது.

3 இலவச பாலாகாரம் புத்தூர் இளஞ்சிறுருக்கு உதவுதற்காகப் பாதுகாப்புக் கொமஷனர் அவர்களது உதவி பெறவேண்டும். அதற்குரிய ஒழுங்குகள் செய்யவேண்டுமென்று இம் மகாசபை கோருகின்றது.

மேற்படி விஷயங்களைத் திருத்தமாக நடாத்துவதற்காக ஒரு காரிய நிர்வாகசபைத் தெரிவு நடைபெற்றது. பின், நன்றிகூறலுடன் மேற்படி மகாசபை சாயந்தரம் எட்டு மணியளவில இனிது கலைந்தது.

—கடித

## இணுவில் 'ஆவரங்கால் சின்னத்தம்பி வைத்தியசாலை'த் திறப்புவிழா

நிகழும் தாரணஞு வைகாசி மீ 20-ந் தேதி (2-6-44) வெள்ளிக்கிழமை பின்னிரவு 4 மணியளவில் வரும் இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் என்னால் அமைக்கப்பெற்ற ஷை வைத்தியசாலைத் திறப்புவிழா நடைபெறும். அத்தருணம் அன்பர்கள் யாவரும் அழைக்கப்படுகின்றனர்.

இங்ஙனம்,
சு. இராமலிங்கம்,
சுதேச வைத்தியன், இணுவில்.

Mis: 33, 22,25,29.5,1.6.44.

## அரசாங்க சபையைக் கலைக்கப் பிரேரணை

### மிஸ்றர். ஸ்ரீபால சமரக்கோடி கொண்டு வருவார்

ஈஸ்டர் விடுமுறைக்குப் பிறகு அரசாங்கசபை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்குச் சபைத் தலைவர் சேர். துரைசாமியின் தலைமையிற் கூடியது.

அரசாங்கசபையின் ஆயுட்காலம் இனி நீடிக்கப்படக் கூடாதென்றும் இவ்வருடம் அதன் ஆயுட்காலம் முடியும் பொழுது சபையைக் கலைக்க வேண்டுமென்றும் கோரித் தீர்மானமொன்று கொண்டுவரப் போவதாக நாரமலைப் பிரதிநிதி மிஸ்றர் ஸ்ரீபாலசமரக்கோடி முன்னறிக்கை செய்தார்.

## கீல் துறைமுகம் தாக்கப்பட்டது

### ஐரோப்பிய இலக்குகள்மீது நேசவிமானங்கள்

லண்டன், மே 22

ஜெர்மன் கடற்படைத் தளமான கீல் துறைமுகத்திலுள்ள இலக்குகளை இன்று அமெரிக்க பறக்குங் கோட்டைகள் போர்விமானத்துணையுடன் தாக்கினவென்று அமெரிக்க இராணுவத் தலைமைக்காரியாலயம் அறிவிக்கிறது.

ஜெர்மன் விமான நிலையங்கள்மீது 22 ஜெர்மன் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பாஸ்டிகலே பகுதியிலுள்ள இராணுவ இலக்குகளும் பெல்ஜியத்திலுள்ள புகைரதப் பாலங்களும் நமது விமானங்களால் தாக்கப்பட்டன. 13 அமெரிக்க விமானங்கள் திரும்பவில்லை.

### வட பிரேஞ்சு இலக்குகள் தாக்கப்பட்டன

பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் வடபிரான்சிலும் பெல்ஜியத்திலுமுள்ள இராணுவ இலக்குகளைத் தாக்குவதில் ஈடுபட்டிருந்தன. வடபிரான்சிலுள்ள சத்துருவிமான நிலையங்களும் தாக்கப்பட்டன. 6 சத்துருப் புகைரத என்ஜின்கள் இயந்திரப் பீரங்கிப் பிரயோகத்திற்குள்ளாயின.

## காட்டிற் காணப்பட்ட மனித எலும்புக்கூடு

அனுராதபுரம் மே 22

ஹிங்குறகொடைக் காட்டுக்குள்ளே ஒரு மனித எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நீதிபதி இவ்வெலும்புக் கூட்டைப்பற்றி விசாரணை நடத்தினர். அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லையென டாக்டர் தெரிவித்தார்.

## விவாகம்

### நாச்சிகேதன்—பராசக்தி

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த காம்பன் திரு. N. செல்லையா அவர்களின் புதல்வன் திரு. நாச்சிகேதனுக்கும், காரைநகர் திரு. V. தம்பிப்பிள்ளையவர்களின் புதல்வி திருவளர் செல்வி பராசக்தியம்மாளுக்கும், நேற்று (24-5-44) காலை 7 மணி வரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மணமகளில்லத்தில் விவாகம் சிறப்புற நிறைவெய்தியது; தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் திருவருள் முன்னிற்பதாக.

## அரசாங்கக் கண்ணாடித் தொழிற்சாலை

### தினந்தோறும் 1 தொன் சாமான்கள் உற்பத்தி

அரசாங்கக் கண்ணாடித் தொழிற்சாலையில் தினந்தோறும் ஒரு தொன் கண்ணாடிச் சாமான்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன. இன்னும் சிறிது நாட்களில் கண்ணாடிச் சாமான் உற்பத்தி ½ தொன்னுக அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு உலைக்களங்களும் கட்டிமுடிக்கப்பட்டுச் சேர்ந்தாற்போல் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டால் தினசரி 3 தொன் கண்ணாடிச்சாமான்கள் உற்பத்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத் தொழிற்சாலையில் முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்ட சாமான்கள் ஆயிரக்கணக்கான மைப்புட்டிகள் டம்ளர்கள் சிமினிகள் ஆகியவையேயாகும் இச்சாமான்களின் காடுமுரடான விளிம்புகளை வழவழப்பாக்க இந்தியாவிலிருந்து இயந்திரமொன்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்புதான் இப்பொருட்கள் விற்பனைக்குக் கொண்டுவரப்படும்.

## தற்சமயம் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை

### காந்திஜீ கடிதம்பற்றி காயிதே ஆஸம் ஜின்னு

ஸ்ரீநகர் காஷ்மீர் மே 10—

"தற்சமயம் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை"

காந்திஜி சென்ற வருஷம் சிறையிலிருந்து எழுதிய கடிதத்தை ஜனுப் ஜின்னுவிடம் காட்டியபோது அவர் மேற்கண்டவாறு கூறினர்.

ஸ்ரீநகருக்கு 10 மைலுக்கு அப்பாலுள்ள டால் ஏரிக்கரையிலுள்ள பிரசித்திபெற்ற நிஷாத் தோட்டத்திற்குப் பக்கத்தில ஒரு ஏகாந்த ஸ்தலத்தில ஜின்னு ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறார், ஜூன்மாதக் கடைசிவரை அவர் இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேக்கிழார் நாயனர் குருபூசை

நிகழும் தாரண ஞு வைகாசிமீ ௧௪ ௨ (27-5-44) சனிக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் சேக்கிழார் நாயனர் குருபூசை வழமைபோலச் சபைநிலையத்தில் நடத்தப்படும்.

நிகழ்ச்சிகள்

முற்பகல் 9—11 சிவபூசை

முற்பகல் 11மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையும் உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்த சேக்கிழார் நாயனர் புராணம் படித்துப் பயன் சொல்லுதல்

பிற்பகல் 1மணி—2மணி வரை மாகேசுரபூசையும் நடைபெறும்.

## கரவை மாணிக்கவாசக வித்தியாலயம்

### 'சேக்கிழார் குருபூசைத்தினம்' சைவப்பிரசங்கம்

எதிரேவரும் சனிக்கிழமை (27-5-44) மாலை ஏழு மணியளவிற் கரவை மாணிக்கவாசகவித்தியாலய மண்டபத்தில் ஷெ பாடசாலை மாணவர் கலாவிருத்திச் சங்க ஆதரவில் விக்நேஸ்வராக்கல்லூரி ஆசிரியர், வித்துவான் க. கார்த்திகேசு, B. A. அவர்கள் தலைமையில் 'சேக்கிழார்' என்னும் பொருள்பற்றி, திரு. கா. வல்லிபுரம் ஆசிரியா அவர்கள் உபந்நியாசஞ் செய்வார்கள் என அறிகின்றோம்.

## 'காங்கிரஸ் தலைவர்கள் விடுதலை இல்லை'

லண்டன் மே 22—

"மற்றக்காங்கிரஸ் தலைவர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஸ்ரீ காந்தியை விடுதலை செய்யவில்லை. பருவமழை காலத்தில் இந்தியாவிலே மத்திய சட்டசபை மாகாணச்சட்டசபைத் தேர்தல்களை நடத்துவது சாத்தியமல்ல" என்று இந்தியா மந்திரி மிஸ்றர், அமெரிகொம்மன்ஸ்சபைத்தொழிற்கட்சி அங்கத்தவரான மிஸ். டோபியும் மற்றும் 10 அங்கத்தவர்களும் எழுதிய கடிதத்துக்கு அனுப்பிய பதிலிற் குறிப்பிட்டுள்ளார்.

"எல்லா அரசியற் கைதிகளையும் விடுதலை செய்வதற்குக் காந்திஜியின் விடுதலை ஆரம்பமாகுமென்று நம்புகிறோம். எல்லாக் காங்கிரஸ் தலைவர்களையும் விடுதலை செய்யும் விஷயத்தைப்பற்றி நாங்கள் கவனஞ் செலுத்த வேண்டுகிறோம்" என்று அந்த கொமன்ஸ்சபை அங்கத்தவர்களும் கேட்டிருந்தார்கள். மிஸ்றர் அமெரி அளித்த பதில் வருமாறு:—

திரு. காந்தியை விடுதலை செய்தது மற்றக் காங்கிரஸ் தலைவர்களையும் விடுதலைசெய்ய வழிதிறக்குமென்று எதிர்பார்ப்பது இயற்கையே. அந்த எண்ணத்துடன் விடுதலை செய்யவில்லை. தேக அசௌக்கியத்தை முன்னிட்டுத்தான் விடுதலை செய்தது. இன்னும் சிறையிலுள்ளவர்களின் நிலைமையில் மாறுதலில்லை.

காங்கிரஸ் கட்சியைப்பற்றி என் கருத்தையும் அரசாங்கத்தின் கருத்தையும் நான் திரும்பவும் சொல்லத் தேவையில்லை. இப்போதுள்ள முட்டுக்கட்டை அவர்கள் போட்டதே. தங்கள் அரசியற் கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காக அரசாங்க முறையை நொருக்கிய சமயத்தில் அப்படியே ஸ்தம்பிக்கும்படி செய்யும் நோக்கத்துடன் 1942-ம் வருஷ ஆகஸ்டுத் தீர்மானத்தைச் செய்தார்கள்.

சென்ற பெப்ரவரி மாதம் ஒத்துழைக்கவேண்டுமென்று வைஸ்ராய் விடுத்த வேண்டுகோளுக்குக் காங்கிரஸ தலைவர்கள் இதுவரையிற் செவி சாய்க்கவில்லை. ஆகஸ்டு தீர்மானக் கொள்கையைப் பின்பற்றி வரும் அவர்களை இந்திய பாதுகாப்புக்குப் பொறுப்பான வைஸ்ராயும் அவரது கவுன்ஸிலும் எப்படி விடுதலை செய்ய முடியும்?

மேலும் மற்றக் கட்சியினரிடையே நிலவும் அபிப்பிராயத்தைப் பார்த்தால் அவ்வித விடுதலை பொதுச் சமாசத்துக்கு உதவுமென்றும் தோன்றவில்லை.

இந்தியாவிற் பொதுத்தேர்தலைக் குளிர்காலத்தில்தான் நடத்த முடியும். ஆனால் தங்கள் யோசனை அனுகூலமானதல்ல. பர்மா முனையில் தற்காலிக மந்தம் ஏற்பட்டுள்ள தற்கும் சட்டசபை தேர்தல் நடத்துவதற்கும் பொருந்தாது.

## இரத்தக் கொதிப்பு அதிகரிக்கிறது

### 'சினிமா' பார்த்ததால் காந்திஜிக்குக் களைப்பு

பம்பாய் மே 22

காலஞ்சென்ற ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்திக்காக இன்று ஜுஹுவில காந்தி விசேஷ பிரார்த்தனைகள் நடத்தினர், ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காலமாகி இன்றுடன் மூன்றுமாதமாகிறது.

நேற்றிரவு பேசும்படம் பார்த்ததன் பலனாகக் காந்திஜியின் இரத்தக் கொதிப்பு அதிகரித்திருக்கிறது.

இன்று வெளியான டாக்டர்களறிக்கை கூறுவதாவது:—நேற்றிரவு 'மொஸ்கோவுக்குத் தூதுக்கோஷ்டி' என்ற பேசும்படத்தை வெகுநேரம் பார்த்துக்கொண்டிருந்ததால காந்திஜி மிகவும் களைத்துவிட்டார். அவர் பூரணஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தையே இது காண்பிக்கிறது.

## உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

மனம் வருந்துகிறேன்; ஆனாலும் அதனை நான் முற்றாக நம்பவில்லை; அதனை உம்மிடம் நேரிற் கேட்டு உண்மையையறிந்து அந்தச் சந்தேகத்தையும் என் மனக்கிலேசத்தையும் நீக்கிவிடலாமென்று நினைத்தேன்; அதாவது நீர் மதுபானஞ் செய்யப் பழகிக்கொண்டீராம். அது மெய்தானா" என்று உபாத்தியாயர் மிகவும் ஆறுதலாக வினவினர். விசுவநாதன் சற்றுநேரமாதும் பேசாதிருந்து விட்டுப் பின் தன் வித்தியா குருவைப் பார்த்து "ஐயா, உங்களுக்கு நான் எதனையும் ஒளிக்கவொண்ணாது; நீங்கள் கேள்விப்பட்ட விஷயத்திற் கொஞ்சம உண்மையும் உண்டு" என்று வெட்கம மீதூரச் சொன்னன.

"அப்படியானல் உங்கள் குலங்குடிக்கும் உமது படிப்பிற்கும் அந்தப் பழக்கம் ஏற்றதல்லவே; அப்படியான பழக்கமிருந்தால் அதனை இன்றோடு விட்டு விடுவதுதான் முறைமையாகும். அறியாமையினலே ஒரு பிழையைச் செய்தால் அது பிழையென அறிந்தவுடனே விட்டுவிடுவதுதான் குலத்திற் பிறந்தார் செய்யுஞ் செயல்; ஆனதால் தம்பி, அந்தத் தீய பழக்கத்தை இந்த நிமிஷந் தொடுத்து எனக்காக நீர் விட்டுவிட வேண்டும்" என்று பரிந்து சொன்னர் உபாத்தியாயர். விசுவநாதன் சற்றுநேரம யாதும பதில் சொல்லாமல் யோசித்துக்கொண்டிருந்தான்; பின்னரும் அவன் தனது உபாத்தியாயரைப் பார்த்து "ஐயா, நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன்; ஆனல் இதனைப்பற்றி உங்களுக்குச் சொன்னவர் ஆரென்பதை நான் அறியவொண்ணுதா" என்று கேட்க, உபாத்தியாயர் "தம்பி விசுவநாதா, அதனை நீர் அறிவதினலே வரும் நன்மையென்ன? உம்மிடத்திலே அன்புள்ளவர்கள்தாம் என்னிடம் வந்து, இந்த விஷயம் உண்மையானல புத்தி சொல்லி உம்மைத் திருத்துமபடி கேட்டார்கள; நீரும விஷயம் நிசமென்று ஏற்றுக்கொண்டீர்; அதனை விட்டுவிடுவதற்கும உடம்பட்டுக்கொண்டீர்; இவ்வளவும போதுமே" என்று ஆதரவாகச் சொன்னர். "எங்கள் மாமா வீட்டுக்காரருக்கும் இந்தக் கருமந் தெரியுமா ஐயா" என்று மீட்டுங் கேட்டான் விசுவநாதன். உமது மாமனர் வீட்டுக்காரருக்கு இன்னமுந் தெரியாதென்று நினைக்கிறேன்; அவர்கள் அறிய முந்தியே இதனை விட்டுவிட்டால் சரிதானே" என்ருர் உபாத்தியாயர். உபாத்தியாயர் சொன்ன மறுமொழியைக் கொண்டு "இவ்விஷயத்தை என் மாமன் வீட்டுக்காரர்தான் இவருக்குச் சொல்லியிருக்க வேண்டும்" என்ற சந்தேகங் கொண்டான் விசுவநாதன். (வரும்)

## பிரதான மாறுதல் இல்லை

மொஸ்கோ மே 22

இன்றிரவு வெளியான சோவியத் அறிக்கை கூறுவதாவது— போர் முனையில் இன்று பிரதானமான மாறுதல் இல்லை. 17 சத்துரு விமானங்கள் நேற்றுச் சுட்டு வீழ்த்தப்பட்டன.

## மட்டக்களப்புத் தேர்தல் எதிரொலி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளும் மனுதாருக்கு 3981 வாக்குகளும் கிடைத்தது முதலாவது எதிர்மனுதார் 209 வாக்குகளால் தான் வெற்றிபெற்றாரென்றும் நீல நிறம் கொடுக்கப்பட்டிருந்த திரு. வ. கனகசிங்கத்துக்கு 1750 வாக்குகள் கிடைத்தனவென்றும் தெரிவித்தார்.

### பிற்போக்கான தொகுதி

சம்பந்தப்பட்டவரை மேற்படி தொகுதி மிகவும் பிற்போக்கான ஒரு தேர்தல் தொகுதியென்றும் ஆகவே வாக்குப்பெட்டிகளில் இருக்கும் பெயர்களை வாசிக்கமுடியாத வாக்காளர்கள் தவறாக வாக்களித்திருக்கலாமென்றும் மனுதாருக்காக வாக்களிப்பதாக நினைத்துக் கொண்டு வாக்காளர்கள் திரு. கனகசிங்கத்தின் பெட்டியில் தங்கள் வாக்குகளைப் போட்டிருக்கலாமென்றும் திரு. ஒபயசேகரா குறிப்பிட்டார்.

வாக்குப்பெட்டிகள் நீதிபதியின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டன.

நீல வர்ணம் தீட்டப்பட்டிருந்த பெட்டியின் நிறம் தேர்தலுக்குப் பிறகு மங்கியிருப்பதாகத் திரு. குமாரஸ்வாமி தமையா தெரிவித்தார்.

### மனுதாரின் சாட்சியம்

மனுதாரான ஜனாப் மிஹ்ளார் தமது சாட்சியத்தில் தாம் வெலிகமைப் பட்டினசபையின் உபதலைவரென்றும் தேர்தல் தினத்தன்று தாம் வாக்களிப்பு ஸ்தலங்களுக்கு விஜயஞ்செய்தபோது பல வாக்காளர்கள் வாக்குப்பெட்டிகளைப் பிரித்தறிவதிலுள்ள கஷ்டத்தைத் தம்மிடம் கூறியதாகவும் தமதுடைய பெயரைப் பிரேரித்தவரான ஜனாப் ஹுஸைன் ஆலிம் என்பவர் அவரது வாக்கைத் தவறான பெட்டியிற் போட்டதாகத் தம்மிடம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

கண்டி உதவி பாரணத் தலைவரான ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ் சாட்சியம் கூறுகையில் தேர்தலுக்கு 5 அல்லது 6 நாட்களுக்கு முன் ஒரு ஒத்திகை நடைபெற்றதாகவும் அப்போது நீலப்பெட்டி பச்சை கலந்த நீலமாகவோ அல்லது நீலம் கலந்த பச்சையாகவோ இருந்ததாகவும் இதுபற்றி நடைபெற்ற விவாதத்தில் தேர்தல் அதிகாரி பெட்டிகளுக்குத் தீட்டப்பட்டிருந்த நிறம் சரியானதுதானென்று தீர்மானித்ததாகவும் குறிப்பிட்டார்.

வருலூரைச் சேர்ந்த ஜனாப் எஸ். எம் இஸட் மௌலானா சாட்சியங் கூறியபின் மேல்விசாரணை இன்று வரை தவணையிடப்பட்டது.

---

### தேகவியோகம்

**ஸ்ரீமதி. இ. விசாலாட்சி அம்மாள்**

மானிப்பாய் வாசராயிருந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆறுமுகம் அவர்களின் புத்திரியும் நமசிவாயம் இராசையா அவர்களின் பத்தினியுமாகிய ஸ்ரீமதி. விசாலாட்சி அம்மா தம்மைப் பீடித்த நோய்காரணமாக வைகாசி மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை சாயந்தரம் இவ்வுலகவாழ்வை யொருவினரென்னும் துக்கசமாச்சாரத்தை ஈங்கே குறிப்பிடுகின்றோம். அடுத்தநாளாகும் ஞாயிற்றுக்கிழமை இவருடைய இயக்கிரியைகள் தமையனாராகும் மகாலிங்கம் அவர்களாற் பலசனசமூகத்தில் விதிப்படி மிகவுஞ் சிறப்பாக நடந்தேறியது.

—கடித

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி மே 26

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 வாஞெலி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஸி ஆர் அனந்த பாகவதர் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸி ஆர் அனந்த பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 சாட்டியக்குடி ஆர் மீனாக்ஷி சுந்தரம் பாட்டு 5-40 குரான்-ஷரீப் 6 டி எஸ் வைத்தியநாதன் டி எஸ் ராஜரத்தினம் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஆறுமுகத்தின் ஆராய்ச்சி 8 டி எஸ் வைத்தியநாதன் டி எஸ் ராஜரத்னம் நாகஸ்வரம் 8-45 சாட்டியக்குடி ஆர் மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10-30 முடிவு.

### சனி மே 27

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 எஸ் ஜி கிட்டப்பா† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திரைகானம் † 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸி ஹொன்னப்ப பாகவதர் † 1-50 வி வி சடகோபன் † 2 தமிழில் செய்திகள் 2-05 பி எஸ் நடராஜன் பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 வி கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 5-40 திருவாய்மொழி விளக்கம் 6 பி எஸ் நடராஜன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 சிறை நிழல் 2 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸிலுள்ளபடி வி வெங்கடகிரியப்பா வீணை 9 ஆங்கில நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கர்நாடக ராகங்கள் 13 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு மே 28

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 முத்துஸ்வாமி†8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30இசைக் கதம்பம் † 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் எஸ் தங்கம் ஈஸ்வரன் வீணை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக்கதம்பம் † 2-30 முடிவு.

மாலை 5 என் எஸ் தங்கம் ஈஸ்வரன் வீணை பாட்டு 5-40 தேவாராதனை 6 திரைக்கதம்பம் † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 சிறையில் சிக்கல் 2 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் 8 பல்லடம் சஞ்சீவராவ் புல்லாங்குழல் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பஞ்சத்துடன் போர் 10 இசைவேளை 10-30 முடிவு.

### திங்கள் மே 29

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சிவாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருச்சேறை கலியாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம்† 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜி சாரங்கபாணிசெட்டியார் பாட்டு தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30முடிவு.

மாலை 5 திருச்சேறை கலியாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம்7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 என் ஸி வஸந்தகோகிலம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புதிய இந்தியாவின் பிரச்னைகள் 10 இசைவேளை 10-30 முடிவு.

## அகில இலங்கைச் சைவ மகாநாடு

(சிறப்பு)

இவ்வாண்டின் மகாநாடு 1941 ஆம் ஏப்ரல்மீ 28,29, 30ம் தேதிகளில் யாழ்ப்பாணத்து இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் கூடியது. பல தமிழ்ப் பேரறிஞர்களும் சிவநேயச் செல்வர்களும் திரண்டு வந்திருந்தனர். அவைக்கூட்டம் பூலோக கைலாசம் போல் விளங்கியது. ஆடவர்களும் பெண்மணிகளும் சிவவேடப் பொலிவோடு வந்து பிரசங்கங்களைக் கேட்டின்புற்றனர். சைவ வளர்ச்சிக்கேற்ற பல சொற்பொழிவுகளும் தீர்மானங்களும் அறிஞர்களால் நிகழ்த்தப்பட்டன. அவற்றுள் மூன்று உபந்நியாசங்கள் பெண்மணிகளால் செய்யப்பட்டன. சைவபரிபாலன சபையினர் நடாத்தும் பரீக்ஷைகளிற் சித்திபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் ஏராளமாக வழங்கப்பட்டன. உபந்நியாசத் தேர்தலில் திறமைபெற்ற சில மாணவர்களும் மாணவிகளும் தங்கள் திறமை புலப்படும்படி சில சொற்பொழிவுகள் ஆற்றினர். அவை மெச்சத்தக்கவையாயிருந்தன. இப்படிச் சிறுவர்களையும் சிறுமிகளையும் பழக்குவிப்பது பாராட்டற்பாலது.

பிள்ளைகளுக்குப் பரிசாக வழங்கும் புத்தகங்களில் மற்றைப் புத்தகங்களினும் பார்க்க நாவலர் அச்சிட்ட புத்தகங்களை மிகுதியாக வழங்குதல் அப்பெரியாரைப் போற்றியதாகும். அவர்கள் சரித்திரம் பிரபந்தம் முதலியவற்றையும் வழங்கலாம். இதனைச் சபையார் கவனிப்பார்களாக.

இப்பேரவைக்குத் தலைமை வகிக்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. இது நாயகருத் தவிசிட்டதை ஒக்கும். இத்தகைய அருமைப்பேற்றைப் பெற்றும் "ஆட்டாது பாவ முயர்ந்து" என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்க எனது பழமை வந்து முன்னின்றது. தேக சுகவீனம் எனக்கு வழியில் உண்டாயது. அதனால் யான் என் கடமையைச் சரிவரச் செய்யக்கூடாமல் வருந்தலானேன். திருவருள் ஆவ்வாறிருந்தது என்று பிறகு தேறினேன். எனது குறையை நிறைவாகக்கொண்டு என்னை ஆதரித்த அன்பர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இந்தியாவிலே பற்பல இடங்களிலே நடைபெற்ற பல தமிழ்ச் சபைகளுக்கும் சைவ சபைகளுக்கும் யான் போனதுண்டு. ஆனால் அச்சபைகளில் இத்தகைய பக்தி மான்களை யான் கண்டதில்லையென்று திட்டமாய்க் கூறுவேன். யாழ்ப்பாணத்தில் யான் கண்ட சிவநேசத்தையும், சிவனடியார் பக்தியையும், உடசாரத்தையும் மனத்தூய்மையையும் வேறிடங்களிற் காணவில்லை.

மறை முடிவிற் பயில் கருத்து
மன்னியமெய்ப் பொருளவிருப்புங்
கறைமிடற்றோன் திருவடிக்கீழ்
மெய்யன்புங் கடுந்துயர்நோய்
பறையவரு நியமமும் பரிந்து
இயல்பாக் கிடைத்தமனை
நிறைவுடையோர் சிவனடியார் நீடூழி
வாழியவே.

## பொது ஜனப் பாதுகாப்புப் பகுதி

### கூட்டுறவு ஸ்ரோர்களுக்கு பால் உணவுகள் வினியோகம்

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் பல்வேறு கிளைடிப்போக்களிலும் தமக்கு அனுமதிக்கப்பட்ட பால் உணவுகளைப் பெற்றுச் செல்வதற்கு வரும் கூட்டுறவு ஸ்ரோர்களின் பிரதிநிதிகள் இனிமேல் முந்திய மாதத்தில் கிடைத்த பால்உணவுகள், அவை எவ்விதம் செலவாயின, மீதம் இருந்தால், எவ்வளவு இருக்கிறது என்பவை பற்றிய முழுவிபரங்களையும் எழுதிச் சங்கத் தலைவரிடமும் காரியதரிசியிடமும் அதற்கு அத்தாட்சி வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரசாரண உத்தியோகஸ்தர்,
G. 24, 22,&25.5.44.

---

## அறிவித்தல்

### யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944ம் ஆ மேமீ 29-ந் உ திங்கட்கிழமைமுதல் யூன் 4ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள் மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருள்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

1 தட்டாங்பயறு அல்லது மட்டுர்க்கடலை அல்லது துவரம் பருப்பு கால் அவுன்ஸ்

2 கடுகு அல்லது மஞ்சள் அல்லது கதுத்தப்பயறு கால் அவுன்ஸ்

(2) தங்களுக்குச்சேரவேண்டிய உப உணவுப்பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெற்றுக்கொள்ளலாமென இத்தாலறிவிக்கப்படுகின்றது.

E. B. திசைவீரசிங்கம்,
வடமாகாண ஏஜண்டருக்காக
யாழ்ப்பாணம் கச்சேரி
23—5—44.
G 27 25—5—44

---

என்னும் பாடலுக்கு இலக்கியமாகவுடையவர் யாழ்ப்பாணத்துச் சிவநேயச் செல்வர் என்று கூறுவது மிகையாகாது.

இமகேசரிப் பத்திராதிபர் தமது 30-4 44ம் பத்திரிகையிற் குறிப்பிட்டதுபோல் இச்சபையினர் மகாநாட்டுக் கூட்டத்தோடு நின்றுவிடாது தாங்கள் மேற்கொண்ட பல துறைகளிலும் சிவதொண்டாற்றிச் சைவபரிபாலனஞ் செய்வார்களென்று நம்புகிறேன்.

சைவ சம்பந்தமான பல அரிய விஷயங்களும் குறிப்புகளும் நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னர்ச் சிறுதுண்டுப் பத்திரிகை மூலமாகவும் சில extracts ஆகவும் வெளியாயுள்ளன. அவற்றைச் சேகரித்து மீட்டும் அச்சிட்டுதவினால் சைவ உலகத்திற்குப் பயன் உண்டாகும். இத்தகைய பிரசுரங்கள் என்னிடம் பலவுள. வேண்டுமாயின் உதவச் சித்தமாயிருக்கின்றேன்.

ஞாலநின்புகழே மிகவேண்டும்
ஆலவாயி லுறைபுமெம் மாதியே

சே. வெ. ஜம்புலிங்கப்பிள்ளை
17—5—44

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 25, May, 1944.